கல்வியமைச்சு – E Thaksalawa மாதிரி வினாப்பத்திரம் - 01

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2022 (2021)

General Certificate of Education (Ord.Level) Examination - 2022 (2021)

தமிழ் மொழியும் இலக்கியமும் I, II ஒரு மணித்தியாலம்

Tamil Language and Literature I, II One hours

தமிழ் மொழியும் இலக்கியமும் I

# விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1 - (3) | 11 - (1) | 21 - (2) | 31 - (3) |
| 2 - (2) | 12 - (1) | 22 - (3) | 32 - (2) |
| 3 - (3) | 13 -(2) | 23 - (2) | 33 - (1) |
| 4 - (3) | 14 -(3) | 24 - (3) | 34 - (4) |
| 5 - (4) | 15 -(2) | 25 - (2) | 35 - (3) |
| 6 - (1) | 16 -(4) | 26 - (3) | 36 - (3) |
| 7 - (3) | 17 - (2) | 27 - (4) | 37 - (2) |
| 8 - (4) | 18 - (1) | 28 - (2) | 38 - (4) |
| 9 - (4) | 19 - (2) | 29 - (2) | 39 - (1) |
| 10 - (4) | 20 - (3) | 30 - (2) | 40 - (2) |

**கல்வியமைச்சு – E Thaksalawa** **மாதிரி வினாப்பத்திரம் - 03**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2022 (2021)**

**General Certificate of Education (Ord.Level) Examination - 2022 (2021)**

**தமிழ் மொழியும் இலக்கியமும் I, II**

**Tamil Language and Literature I, II**

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

**கவனிக்க :**

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

ii. இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

## <u>விடைகள்</u>

1. சுருக்கமான விடை எழுதுக.

i. திருவருளாய் + இருக்கப் + பெறின் + இறைவா

ii. பாரதி ஆழி சூழ் உலகை கவிதையால் வென்றான்.

iii. எழுவாய் - நீ
பயனிலை - சொல், போவேன்

iv. நண்பர்களுடன் நகரத்திற்கு துவிச்சக்கரவண்டியில் செல்ல ஆயத்தமானார்.

v. ஊன் - இறைச்சி, தசை, உடல்
ஊண் - உணவு

vi. முகவரி, உள்முகவரி, விளிப்பு, தலைப்பு, உடல், முடிப்பும் கையொப்பமும்

vii. விடைகள்

- விற்பனையை அதிகரித்தல்.
- பாவனையை அதிகரித்தல்.
- பிரசித்தப்படுத்தல்.
- நாட்டத்தை, விருப்பத்தைத ஏற்படுத்தல்.
- தகவல்களை அளித்தல், வழங்குதல்.
- பிரசாரப்படுத்தல்.

viii. விடையளிக்கும் ஆற்றல்

ix. இலன்

x. “ஆகா! அதற்கென்ன, நல்லாய்ப் பேசலாமே” என்றார் சிவப்பிரகாசம்.

(20 புள்ளிகள்)

2. பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவு செய்து ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடையெழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்கு பொருத்தமான தலைப்பு இடுக.

**i.** **பொருத்தமான தலைப்புகள்:**

- போதையை ஒழிப்போம்
- போதையின் சேவகனாகாதே
- இருள் தரும் போதைப் பாவனை

**அறிமுகம்**

- போதைப் பொருள், அதற்கு அடிமையானோர்.
- போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகக் காரணம்
- தீய நண்பர்களின் சகவாசம்
- நிகழ்வுகளின் போது பரிமாறல்.
- நோய் தீர்க்கும் மருந்து எனத் தவறாகக் கருதுதல்.

**போதைபொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு மாணவர்களின் பங்களிப்பு**

- குடும்ப உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு காட்டல்.
- காணொளிகள் காண்பித்தல்.
- தீமைகளை விளக்குதல்
- குற்றவாளிகளை இனங்காட்டல்.
- போதை ஒழிப்பு குழுக்களை உருவாக்கல்.
- முடிவுரை

**ii.** **பொருத்தமான சில தலைப்புக்கள்**

- ஆசை யாரை விட்டது.
- இக்கரைக்கு அக்கரைப் பச்சை
- நன்றி மறப்ப நன்றன்று.

**தரப்பட்ட விடயத்திற்கு பொருத்தமான வியங்களை உள்ளடக்கி இருவரும் உரையாடும் பாங்கில் எழுதவேண்டும்.**

**நாட்டில் புத்தி ஜீவிகள் வெளியேறுவதற்கான காரணங்களை முன்வைத்தல்.**

- சுயநல வாழ்விற்காக தாய் நாட்டை விட்டுச் செல்வது அயல் வீட்டில் நாணத்துடன் வாழும் நிலைக்கு ஒப்பானதாக் கூறுதல்.
- புத்தி ஜீவிகளை உருவாக்குவதற்கு நாடு செலுத்தும் அக்கறை.
- புத்தி ஜீவிகள் வெளிநாடு செல்வதால் ஏற்படும் தீமைகளை உரையாடுதல்.
- மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

**iii.** **பொருத்தமான தலைப்புக்கள்**

- எதிர்கால சிற்பிகள்
- சிறுவர்களைப் பாதுகாப்போம்.

**சபையோருக்கு வணக்கம் தெரிவித்தல்.**
**அறிமுகம்**

- சிறுவர்கள், சமூகம் பற்றிய விளக்கம் 1-17 வயது வரைக்குட்பட்ட யாவரும் சிறுவர் ஆவர்.
- சமூகம் என்ற வரையறைக்குள் உள்ளடங்குவோர்.

**சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரிப்பதற்கான காரணங்கள்**

- சிறுவர்கள் தனிமைப்படுத்தப்படுதல்.
- சிறுவர் உரிமைகள் தொடர்பான விளக்பமின்மை.
- தொழிநுட்ப சாதனங்களின் வளர்ச்சி.
- தொழில் வாய்ப்புக்காக பெற்றோர் வெளிநாடு செல்லல்.

**iv. பொருத்தமான தலைப்புக்கள்**

- கனவாய்ப் போகும் வாழ்வு.
- விடியுமா?
- விடியல்

சிறுகதைக்குரிய அமைப்பை பேணி மீனவ வாழ்வின் துன்பநிலைகளை சித்தரித்து எழுதுதல். பரந்தாமன் கடவில் மீன் பிடித்து சொந்தமாக ஒரு தோணி வாங்குவதாகவோ அல்லது தொடர்ந்தும் வறுமையில் வாழுவதாகவோ கதையினை நிறைவு செய்யலாம்.

(25புள்ளிகள்)

3. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.)

**சுருக்கத்தில் உள்ளடங்கும் முக்கிய கருத்துக்கள்**

- சிறிது சிறிதாக அறிந்து கொள்ளப்படும் அறிவே நிரம்பிய அறிவாகும்.
- பழைமையும் புதுமையும் ஒன்றுபடுதல் அறிவின் வளர்ச்சி
- மாணவரின் முன்னறிவிவே பின்வருவனவற்றோடு ஒற்றுமையாலும் நினைவாற்றலும் அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாதது.
- கற்கும் பொருளை மாணவர் விளங்கிக் கொள்வதற்கு ேற்றமுறையில் ஆசிரியர் ஒரு வழிகாட்டியாய் இருத்தல் வேண்டும்.

(10 புள்ளிகள்)

3. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

i. சமூகத்தில் உணர்வைத் துாண்ட கூடியது என்பதால் அவை சிறுபொறி எனப்படுகிறது.

ii. நல்ல படைப்புக்கள் மனித உணர்வைக் காட்டி தீமைகளை எரிப்பதாலும், கேடான சமூகத்தை வெந்து சாம்பலாக்குவதாலும் பக்கச்சார்பற்ற விமரிசனம் அவசியம்.

iii. திருவிளையாடற்புராணத்தில் இடம்பெறும் நக்கீரர் கதை

iv. வாழ்வில் இறந்து பிறந்து ஏனையவர் வாழ்வை செப்பனிட படைப்பாக்கம் மிளிர்கிறது

v. இறைவன் எழுதிய பாடலில் பிழையிருப்பதாக நக்கீரர் கூறியமை

(10 புள்ளிகள்)

5. கீழ்வரும் தலைப்புகளில் ஒன்றினைத் தெரிவு செய்து 100 சொற்களுக்கு குறையாது எழுதுக.

i. **விடை :**

அமைப்பு : தலைப்பு, அறிமுகம், இடம், காலம், நேரம், ஒப்பம்
கிராமம் பற்றிய விபரிப்பு
கிராமத்தில் ஏற்படும் பிரச்சினைகளை வரிசைப்படுத்தல்
நிகழ்ச்சி நிரல் ஒன்றை தாரித்தல்.

- வறுமை
- அடிப்படை வசதிகள் இன்மை
- பெற்றோரின் அறியாமை
- போக்குவரத்து வசதியின்மை
- வீதிகள் செப்பனிடாமை
- போசாக்கின்மை

மேற்குறித்த விடய விபரிப்பு இடம் பெறல்.
நிறைவு
ஒப்பம் மற்றும் முடிவு

**அல்லது**

ii. **விடை :**

- கழிவகற்றல் பற்றிய பொது விளக்கம்.
- கழிவகற்ற மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள்.
- கழிவகற்றல் அட்டவணை ஒன்றை முன்வைத்தல்.
- பிளாஸ்டிக், கண்ணாடி, உக்கும் பொருட்கள் என வேறுபடுத்தல்.
- வேறுப்படுத்தப்படாவிட்டால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றிய விபரிப்பு.
- உள்ளடக்கம், கழிவுகள், வீதிகளிலும் வடிகால்களிலும் குவிந்து கிடத்தல்.
- துர்நாற்றம் வீசுதல்.
- நோய் பரவுதல்.
- சூழல் மாசடைதல்.

(15 புள்ளிகள்)

**கல்வியமைச்சு – E Thaksalawa** மாதிரி வினாப்பத்திரம் - 03

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2022 (2021)**

**General Certificate of Education (Ord.Level) Examination - 2022 (2021)**

**தமிழ் மொழியும் இலக்கியமும் III** இரண்டு மணித்தியாலம்

**Tamil Language and Literature III** Two hours

**தமிழ் மொழியும் இலக்கியமும் III**

**கவனிக்க :**

- அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

# விடைகள்

1.

(i) (அ) பூதஞ்சேந்தனார்

(ஆ) எள்ளளவாக இருந்தாலும் பிறரிடம் இரவாது தான் பிறருக்குக் கொடுத்தல் இனிமையானது.

(ii) (அ) விபரப்புத்தகம்

(ஆ) "**தொலை"** சிறுகதை

(iii) (அ) வளைந்த இளம்பிறைச்சந்திரன்

(ஆ) திருக்குற்றால நாதர் / சிவபெருமான்

(iv) (அ) வெட்கப்படவேண்டியவற்றுக்கு வெட்கப்படாமல் இருத்தல், நல்லவற்றை நாடிச்செல்லாமை, அன்பு செலுத்தாமை, பேணவேண்டியவற்றைப் பேணிப்பாதுகாக்காமை

(ஆ) அன்பு

(v) (அ) புறநானூறு

(ஆ) கடந்தகாலத்தை எண்ணி இரங்குதல்.

(vi) (அ) வேண்மாள் / சேரமாதேவி

(ஆ) அவரவர் தத்தமது இலட்சிய நெறியில் நின்றனர்

(vii) (அ) மூத்தவாப்பா

(ஆ) காசிம்

(viii) (அ) புறநானூறு

(ஆ) இப்பிறப்பிலே (இம்மை) செய்யும் கொடை (ஈகை)

(ix) (அ) பாரி

(ஆ) பாரிமகளிர் / அங்கவை, சங்கவை

(x) (அ) பெண்கள்

(ஆ) உவமையணி

**(2 x 10 = 20 புள்ளிகள்)**

2.

(i) (அ) இராமனுக்கு இனிய நண்பன், இலக்குமணன், பரதன், சத்துருக்கன் ஆகியோருக்கு மூத்தவன், மலையைப் போன்ற அழகிய நீண்ட தோள்களை உடையவன், சிறந்த பண்புடைய ஆண்மகன்.

(ஆ) கன்றைப்பிரிந்த காராம் பசுவினைப் போல இராமனைப் பிரிந்த கோசலையின் துயர் உவமையணியின் மூலமாக விளக்கப்பட்டுள்ளது.
உவமானம் - கன்றைப்பிரிந்த காராம்பசு
உவமேயம் - இராமனைப் பிரிந்த கோசலை
பொதுத்தன்மை - பிரிவுத்துயர்

(ii) (அ) பாம்பும் எள்ளும்

(ஆ) ஆடிக் குடத்தை அடையும் - பாம்பு படமெடுத்து ஆடிய பின் குடத்தினுள் சென்று அடைந்துவிடும்.
எள்ளு செக்கிலே ஆட்டப்பட்டு குடத்தினுள் எடுத்து அடைக்கப்படும்.

ஆடும் போது இரையும் - பாம்பு படம் எடுத்து ஆடும் போது இரையும்.
எள்ளு செக்கிலே ஆட்டப்படும் போது இரைச்சல் உண்டாகும்.

மூடி திறக்கின் முகம் காட்டும் - பாம்பு குடத்தில் அடைத்து மூடிப் பின் திறக்கும் போது தலையைத் தூக்கிக் காட்டும்.
எள்ளு குடத்தின் மூடியைத் திறந்தால் எண்ணெய் பார்ப்பவர் முகத்தைக் காட்டும்.

ஓடி மண்டை பற்றின் பரபரக்கும் - பாம்பு தீண்டினால் விசம் தலைக்கேறி தலை பரபரக்கும்.
எள்ளு எண்ணெய்யை தலையில் வைத்தால் தலையில் பரபர எனும் உணர்வு ஏற்படும்.

பிண்ணாக்கு உண்டாம் - பாம்பு பிளவு பட்ட நாக்கினைக் கொண்டிருக்கும்.
எள்ளு எண்ணெய் ஊற்றிய பின் மீதமாக பிண்ணாக்காக வருதல்

(iii) (அ) சூரியன் பனிக்கூட்டத்தை விரட்டுதல், பழமரங்கள் நிறைந்த சோலையில் பழக்கூட்டங்கள் அசைந்தாடுதல், மாலைப்பொழுதில் கருமையான மேகங்கள் வானில் தவழ்ந்து வருதல் போன்றன.

(ஆ) பண்பான இரக்ககுணம் பசியை விரட்டுதல், மனிதன் தன் உண்மையால் தலை நிமிர்ந்து வாழுதல், அறிஞன் கற்றிருந்தாலும் அகங்காரம் கொள்ளாது பணிவாக நடந்து கொள்ளுதல், மகிழ்சியிலும் வெறுப்பிலும் இல்லாள் இன்முகத்தைக் காட்டுதல் போன்றன உயர்பண்புகளாகக் குறிப்பிடப்படுகின்றன.

(iv) (அ) அந்த வித்தியாசாலை மண்டபத்தில் ஒரு பக்கத்தில் ஒரு தூணுக்கு அருகிலே திண்டுத் தலையணை ஒன்றில் அடிக்கடி சாய்ந்து கொண்டும், மடியிலும் பக்கங்களிலும் அடுக்கிய தலையணைகளில் முழங்கைகளை ஊன்றி உள்ளங்கைகளினால் நெற்றியினைத் தாங்கிக் கொண்டு கூட்ட நடைமுறைகளை அவதானித்தபடி இருந்தார்.

(ஆ) குளிர்காலத்திலே இடையிடையே வருகின்ற ஒருவகைக் காசம் அது, மூச்சுவிட முடியாது. பேசவியலாது. வயிற்றைக் கொய்து வாங்குகின்ற பொல்லாத வருத்தம் காச வருத்தம்.

(v) (அ) திருக்காவலூர்க் கலம்பகத்தைப் பற்றியும், தேம்பாவணியைப் பற்றியும், சீறாப்புராணத்தைப் பற்றியும் தமது கருத்துக்களை எழுதியிருக்கின்றார்.

(ஆ) சமயசமரசக் கீர்த்தனைகள் என்றும், சமரசக் கொள்கைகள் என்றும் எங்கு உண்மையும் அழகும் உள்ளதோ அங்கிருந்து கருத்துக்களை நூலாசிரியர் பெற்றுக்கொண்டனர்.

**(4 x 5 = 20 புள்ளிகள்)**

3. **கிருட்டிணன் தூதுச்சருக்கம்**

**(அ)**

கிருட்டிணன் தூதுச்சருக்கம் எனும் பகுதியில் தருமனது சமாதானத்தை விரும்பும் மனநிலையும், அவனது பொறுமையும் அழகுற வெளிப்படுகின்றது. போரினால் ஏற்படும் விளைவுகளை எண்ணிப்பார்த்து குரு இராட்சியத்தில் தமக்கான பங்கினை சமாதானமாகப் பெறுவதற்கு முற்படுகின்றார் தருமன். இவ்வாறு தருமனது பொறுமையும் சமாதான மனப்பாங்கும் வெளிப்படும் தன்மையினை இங்கு நோக்குவோம்.

- போர் புரியாது குருநாட்டில் கௌரவர்களுடன் ஒன்றாக கலந்துவாழ விரும்பியவன், சான்றோர்களையும் உறவினர்களையும் ஒரு குலத்து சகோதரர்களையும் கொன்று ஆட்சியைப் பெறுவதைக் காட்டிலும் காட்டில் சென்று வாழ்வதே மேல் என கருதியவன்.
- பகைமையான கொடிய தீயினை மூட்டி வளர்த்தால் மூங்கில் காடு தானே அழிவதைப் போல கடுமையான கோபத்துடன் போர் செய்தால் நாமும் கௌரவர்களும் இறந்துவிடுவோம். ஆதலால் இருவரும் கூடி வாழும்படி தூது செல்வாயாக என்று கிருட்டிணனை வேண்டுதல்.
- குளிர்ச்சி பொருந்திய குருநாடாகிய அஸ்தினாபுரியை பெறும் பொருட்டு கிருஸ்ணனை சமாதான தூது அனுப்ப முடிவுசெய்தவன்.
- முதலில் சமாதானத்தை மேற்கொண்டு அது நிறைவேறாத சந்தர்ப்பத்தில் போர் செய்வது பழியை ஏற்படுத்தாது எனக் கருதியவன்.
- துரியோதனனிடம் படிப்படியாக தமக்குரிய ஆட்சி உரிமையை வேண்டும் படி கிருஸ்ணனிடம் வேண்டுகின்றான்.
- குருநாட்டின் தமக்குரிய பாகத்தைத் தருமாறு வேண்டுதல், ஐந்து ஊர்களைத் தருமாறு வேண்டுதல், ஐந்து இல்லங்களைத் தருமாறு வேண்டுதல். இது தருமனின் பொறுமையினை வெளிப்படுத்தும் சிறப்பான இடமாகும்.
- வீமன் கோபம் கொண்டு போரினை வலியுறுத்தி உரைக்கும் போது அவன் மீது கோபம் கொள்ளாது அவனை சமாதானப்படுத்தியவன்.
- பெரிய நாட்டின் காரணமாக போர் செய்வது இரு பக்கத்தவர்களுக்கும் பெரும் பழியை ஏற்படுத்தும் என பணிவாக வீமனுக்கு உரைத்தவன்.
- மேலும் தமக்கு துன்பம் இழைத்த துரியோதனன் முதலிய கௌரவர்களையும் தம்முடன் பிறந்த தம்பியராய்க் கருதி அவர்கள் அன்று சபையில் செய்த செயல்களை அவமானமாகக் கருதக்கூடாது என்பதை வீமனுக்கு உரைத்தவன்.
- போர்த் தொழிலானது மன்னர் குலத்தவர்களின் இறுதி உபாயமாகவே விளங்க வேண்டும் என்பதும் தருமனின் பொறுமையை வெளிக்காட்டும் கூற்றாகும். இவ்வாறு தருமனின் பொறுமையானது இப் பகுதியின் வாயிலாக சிறப்புற வெளிப்படுத்தப் படுகின்றது.

**(08 புள்ளிகள்)**

**(ஆ)**

கிருட்டிணன் தூதுச்சருக்கத்தில் திரௌபதி எனும் பாத்திரச் சித்திரிப்பு பற்றி இப் பகுதியில் காணலாம். மகாபாரதத்தின் பிரதான பாத்திரங்களில் ஒன்றாக விளங்குவது திரௌபதி எனும் பாத்திரமாகும். அத்தகைய திரௌபதியின் சிறப்புக்களை பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.

- பாண்டவர்கள் ஐவரினுடைய மனைவியாக விளங்குபவள்.
- விரிந்த கூந்தலையுடையவள்.
- பசுமையான வளையல்களை அணிந்திருப்பவள்.
- துரியோதனனால் துயிலுரியப்பட்ட போது கூவி அரற்றி சபையில் உள்ளோரிடம் நீதி கேட்டுப் புலம்பியவள்.
- பூச்சூடிய குளிர்ந்த கூந்தலாகிய மேகத்தினைக் கொண்டவள்.
- துரியோதனனின் வதத்தின் பின்னரே கூந்தலை முடிப்பதாகச் சொல்லி சபதம் செய்தவள்.

**(07 புள்ளிகள்)**

**(08 + 07 = 15 புள்ளிகள்)**

**குகப்படலம்**

**(அ)**

குகப்படலத்தில் பிரதான கதாபாத்திரங்களில் ஒன்றாக விளங்குவது குகன் எனும் பாத்திரமாகும். அக் குகனது சிறப்புக்களை இங்கு நோக்குவோம். கோசலையைப் பற்றி பரதன் கூறியதைக் கேட்டு அவளது பாதங்களில் வீழ்ந்து அழுது வணங்கியவன் இதனை,

''என்றலுமே அடியின்மிசை நெடிது விழுந்து அழுவானை இவன்…'' எனும் பாடலடிகள் வாயிலாக அறியலாம்.

மேலும், இராமனுக்கு இனிய சகோதரனாகவும், இலக்குவன், பரதன், மற்றும் சத்ருக்கனுக்கு மூத்த அண்ணனாகவும் விளங்கியவன், அத்தோடு மலை போன்ற திரண்ட நெடிய தோள்களை உடையவனாகவும் குகன் விளங்கினான். இதனை,

''இன் துணைவன் இராகவனுக்கும் இலக்குவற்கும்
இளையவர்க்கும் எனக்கும், மூத்தான்
குன்று அனைய திரு நெடும் தோள் குகன் என்பான் ''எனும் பாடலடிகள் தெளிவுறுத்துகின்றன.

இவை மட்டுமன்றி, இராமன் முதலிய தன் பிள்ளைகளுடன் சகோதரனாக இணைத்து கோசலையால் வாழ்த்தப்பட்டவன், தன் துதிக்கையால் வீரச் செயல்களைச் செய்கின்ற ஆண் யானை போன்றவன். ஆண்மகனாக விளங்குபவன், கொடுமைகள் செய்த கைகேயியையும் தன் நல்ல கைகளால் வணங்கியவன் இவ்வாறு குகனின் சிறப்பும், பெருமையும் அழகுற வெளிப்படுவதனைக் காணலாம்.

**(08 புள்ளிகள்)**

**(ஆ)**

**உவமையணிகள்**

1. கன்றுபிரி காராவின் துயர் உடைய கொடி வினவ..
உவமானம் - கன்றினைப் பிரிந்த காராம்பசு
உவமேயம் - இராமனைப் பிரிந்த கோசலை
பொதுத்தன்மை –பிரிவுத்துயரம்

2. குன்று அனைய திருநெடுந் தோள் குகன்..
உவமானம் - மலை
உவமேயம் - குகனது தோள்
பொதுத்தன்மை – பருத்தவலிமை

3. விலங்கல் திண்தோள் கைவீரக் களிறு அனைய காளை இவன்
உவமானம் - விலங்கல் (மலை)
உவமேயம் - குகனது தோள்கள்
பொதுத்தன்மை – வலிமை

உவமானம் - துதிக்கையால் வீரச் செயல் புரியும் ஆண்யானை
உவமேயம் - வீரச்செயல் செய்யும் கைகளைக் கொண்ட குகன்
பொதுத்தன்மை - வீரம்

4. அன்னப்பெடை சிறை இலாது ஆய்கரை அடைவது போல் தோணி அடைதல்..
உவமானம் - அன்னம் இறகு இல்லாது கரை அடைதல்
உவமேயம் - தோணி கரை அடைதல்
பொதுத்தன்மை – மிதந்து கரை அடைதல் (துயரம்)

5. பூங்கொடி போன்ற கோசலை
உவமானம் - பூங்கொடி
உவமேயம் - கோசலை
பொதுத்தன்மை -மென்மை

**உருவக அணிகள்**

1. அறந்தானே என்கின்ற அயல் நின்றாள்.. -அறமாகிய சுமித்திரை
2. துயர்கடல் - துயரமாகிய கடல்
3. கருணை ஆர்கலி - கருணைக் கடலாகிய இராமன்

**(07 புள்ளிகள்)**
**(08 + 07 = 15 புள்ளிகள்)**

**4. கம்பியூட்டர்**

**(அ)**

- கதை சொல்லியாக அரவிந்தனின் தந்தையாக கதையில் இடம்பெற்றிருப்பவர்.
- கம்பியூட்டர் பற்றிய அறிமுகம் இல்லாதவர்.
- அமெரிக்காவில் பணிப்பெண் கேட்ட கேள்விகளால் திணறிப் போனவர்.
- கம்பியூட்டர் வகைகளைக் கண்டு ஆச்சரியம் அடைந்தவர்.
- தட்டெழுத்துப் பொறியில் தேர்ச்சி பெற்றவர்.
- **தொலை** எனும் தலைப்பில் நீண்ட கதை ஒன்றை கணினியில் எழுதியவர்.
- கணிப்பொறி பற்றி அரவிந்தனிடம் கேட்டு அறிபவர்.
- தன் நண்பரை வீட்டுக்கு அழைத்து தன் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்பவர்.
- ஆரம்பத்தில் கம்பியூட்டருடன் பிணக்கு ஏற்பட்டு பின் அதில் இணக்கம் கொண்டவர்.
- நகைச்சுவையாக கதை சொல்லக்கூடியவர்.

**(08 புள்ளிகள்)**

**(ஆ)**

இச் சிறுகதையிலே அதிகமான இடங்களில் நகைச்சுவை உணர்வுகள் இழையோடியுள்ளன. அந்த வகையில் அவை சிறுகதைக்கு வலுச் சேர்க்கின்றன எனலாம். கணினியில் ஆண் பெண் பாகுபாடு இருப்பதாகக் கூறுவதும் அதற்காக கதாயாசிரியர் கூறும் விளக்கமும் நகைச்சுவை உணர்வுடையது. கடைக்காரனின் தோற்றத்தைக் கூறும் போது, அவன் தலையில் இருக்க வேண்டிய முடியெல்லாம் மூக்கு வழியாகவும் காது வழியாகவும் வந்து கொண்டிருந்தது எனக் கூறுதல், அமெரிக்காவில் தூண்டில் வாங்கச் சென்ற போது கடையில் நின்ற பெண் கேட்ட கேள்விகளும் அவர் பட்ட பாடும் நகைச்சுவை உணர்வினை வெளிப்படுத்தல், அமெரிக்கா கடைக்கு தூண்டில் வாங்கச் சென்ற போது அங்கு பெண் குதி உயர் காலணியில் நறுக் நறுக்கென்று கத்தரிக்கோல் வெட்டுவது போல நடந்து வந்தாள் எனக் கூறுதல், காளமேகப் புலவர் பாசை தெரியாத திம்மியோடு இரவுப் பொழுதைக் கழித்த சம்பவத்தை நகைச்சுவை உணர்வோடு கூறுதல், கடைக்காரரும், நண்பரும் உரையாடும் போது எதுவும் தெரியாமல் நின்றிருத்தல், கம்பியூட்டரின் வகைகளை பலவாறாகக் கூறும் போது நகைச் சுவை உணர்வு வெளிப்படுதல், போன்ற பல நகைச் சுவை உணர்வுகள் சிறுகதையின் இடை இடையே இழையோடியுள்ளன.

(07 **புள்ளிகள்)**

(08 + 07 = 15 **புள்ளிகள்)**

**தமிழ்ப்பண்பாடு**

**(அ)**

- இக் கட்டுரையில் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பியல்புகள் என பின்வருவனவற்றை கட்டுரையாசிரியர் குறிப்பிடுகின்றார்.
- உலக மனப்பான்மை - உலக மனப்பான்மை எனும் போது, **யாதும் ஊரே யாவரும் கேளீர்** என்பதும், சமணம், பௌத்தம் என்பவற்றை தமிழ் நாட்டவர் வரவேற்றமையும், கிரேக்கர் மற்றும் வடஇந்தியரிடம் இம் மனப்பாங்கு காணப்பட்டமையும்
- கண்ணோட்டம் - சமய தத்துவம், இலக்கியம், கலை, உரை எனும் பல பிரிவுகளில் இத் தன்மையைக் காண முடிகின்றது.
- பக்தி - இலக்கியம், ஆலயம், பிறநாடுகள், புலவர்கள் எனும் வகையில் இதனைக் காணலாம்.
- ஒழுக்கம் - தமிழரது பண்பாட்டில் ஒழுக்கமே முதன்மையானது, திருக்குறள் ஒழுக்க நூலாக விளங்குகின்றது.
- மக்கள் நலக்கொள்கை - மக்கள் நலனில் அக்கறை கொண்டு செயற்படும் தன்மைகள் இதில் அடங்கும்.

(08 **புள்ளிகள்)**

**(ஆ)**

இந்திரனுடைய தேவாமிர்தம் கிடைத்தாலும் அது இனியதென தனியாக உண்ணாதவர்கள், யாரையும் வெறுக்காதவர்கள், பிறர் அஞ்சுகின்ற துன்பத்திற்கு தாமும் அஞ்சி அது தீர்தற் பொருட்டு இறக்காதவர்கள், புகழ் கிடைப்பதாயின் அதற்கென தம்முயிரைக் கொடுப்பவர்கள், ஒன்றைப் பெறுவதற்காக பழிவரும் என்றால் உலகம் முழுவதும் கிடைத்தாலும் அதனைப் பெற்றுக் கொள்ளாதவர்கள், சோர்வு அற்றவர்களாய் மாட்சிமையுடையவராகி தமக்கு மாத்திரம் என ஒன்றையும் முயலாது வலிய முயற்சியுடையவர்கள், பிறர் பொருட்டு முயற்சியுடையவர்கள் போன்றோர்கள் இருப்பதனாலே தான் இவ்வுலகம் இருக்கிறது என புறநானூறு தமிழர் பண்பாட்டின் அடிப்படைக் கொள்கையினை எடுத்துரைக்கின்றது.

(07 **புள்ளிகள்)**

(08 + 07 = 15 **புள்ளிகள்)**

**5. நாட்டார் பாடல்கள்**

**(அ)**

- நாட்டார் பாடலின் வகைகளில் ஒன்றான மீனவர் பாடலில் மீனவர்களின் கடின உழைப்பு எடுத்துக் காட்டப்படுகின்றது.
- இந்த உலகில் ஒன்றை நம்பி ஒன்று இருப்பதைப் போல மீனவர்களுடைய வாழ்க்கை கடலை நம்பி இருப்பதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.
- வானத்தினைத் தொடுமளவிற்கு ஆழ்கடலுக்குச் சென்று மீனவர்கள் மீன் பிடிப்பதானது அவர்களின் கடின உழைப்பை எடுத்துக்காட்டுகின்றது.
- உச்சி வெயிலில் நின்று ஓடி ஓடி வலையை இழுத்து மீன் பிடிப்பது அவர்களின் கடின உழைப்பைக் காட்டுகின்றது.
- எவ்வளவுதான் கஸ்டப்பட்டு உழைத்தாலும் மீனவர்களுடைய உள்ளமும் வாழ்க்கையும் கடலை நம்பி இருப்பது அவர்களுடைய உழைப்பின் உன்னதத்தினை எடுத்துக்காட்டுகின்றது.

(05 **புள்ளிகள்)**

**(ஆ)**
காதற் பாடல் வாயிலாக காதலன் தன் காதலி மீது கொண்ட அன்பு அழகுற புலப்படுத்தப் படுகின்றது. அத்தகு தன்மைகளைப் பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.
தன் காதலியைப் பல பெயர் கூறி ஆசையோடு அழைத்தல் - நீலவண்டு, ஆசைக்கிளி தான் உன்னை அடையாவிடில் இறந்து விடுவேன் எனக் கூறுதல், அதாவது தன் காதலி கிடைக்காது போனால் தான் இறந்து மயானத்திடை சென்று விடுவேன் எனக் கூறுவதன் ஊடாக காதலனது ஆழமான அன்பு வெளிப்படுகின்றது, தன் காதலி செல்லும் வழியில், காற்றின் வேகம், கடலின் ஓசை, நிலாவின் ஒளி இவையனைத்தும் தன் காதலிக்கு அச்சத்தை ஏற்படுத்தி விடும் எனக் கூறி அவற்றின் செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ளுமாறு உத்தரவிடுதல், உறங்கும் போது தன் காதலி காலடியில் வந்திருந்ததாகக் கூறுதல், தன் மச்சி, மாமி மகள், ஆசியத்து உம்மா என உரிமை கொண்டாடி அவளோடு அன்பு பாராட்டுதல், தூது விடவா, என அவள் சம்மதத்தை நாடி நிற்றல், இனிமையான குரல் கொண்டவள் தன் காதலி எனக் கூறி நிற்றல், இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுவதன் ஊடாக தன் காதலி மீது கொண்ட அன்பின் ஆழத்தை வெளிப்படுத்தி நிற்கின்றான் காதலன். இவ்வாறு காதலன் காதலி மீது கொண்ட அன்பானது அழகுற வெளிக்காட்டப் பட்டுள்ளது.

**(05 புள்ளிகள்)**
**(05 + 05 = 10 புள்ளிகள்)**

**6. நீதிப்பாடல்கள்**

(அ)

நல்லவர் நட்பு, தீயவர் நட்பு என்பன பற்றி நாலடியார் கூறும் கருத்துக்களை பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.
நாய் போன்றவர் நட்பினைத் தழுவிக் கொள்ள வேண்டும். ஏனெனில் நாயானது தன் எசமான் கோபம் கொண்டு எறிந்த வேல் தன் உடம்பில் இருக்கும் போதும் வாலை வளைத்து ஆட்டும். அதாவது நன்றிக் குணத்தை வெளிப்படுத்தும் இயல்பும், பழிவாங்கும் குணமும் கொண்டிராதது நாயாகும். அத்தகு குணமுடையார் நட்பினைப் பெறுவது சிறப்பாகும் என்பது நாலடியார் கருத்தாகும்.

அதே போன்று யானை போன்றவர் நட்பினை நீக்க வேண்டும். ஏனெனில் யானை தன்னை வளர்த்த பாகனையே கோபம் வந்தால் கொன்று விடும். அதாவது பழி வாங்கும் உணர்ச்சியுடையது. ஆகவே அத்தகைய குணமுடையவர் நட்பானது விலக்கப்பட வேண்டியது அவசியம் என்கின்றது நாலடியார்.
இதனை,

‘‘யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்

கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும் - யானை

அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்

மெய்யதா வால் குழைக்கும் நாய்’’ எனும் பாடல் மூலமாக விளங்கிக் கொள்ளலாம்.

**(05 புள்ளிகள்)**

(ஆ)

- முதுமொழி வெண்பாவில் மனநிறைவின் வெளிப்பாடு எடுத்துக்காட்டப்படுகின்றது.
- உப்பில்லாத கஞ்சியினை அறுசுவை உணவைப்போல கருதி உண்ணுதல்.
- துவைத்துக் கிழிந்த ஆடையினைப் பட்டாடை போல் உடுத்துதல்.
- பனையோலைப் பாயில் படுத்து உறங்கினாலும் பஞ்சு மெத்தையில் படுத்துறங்குவது போல் கருதுதல்
- இவ்வாறு மனநிறைவு உடையவர்களின் மனம் கொண்டது மாளிகையாகும்.

**(05 புள்ளிகள்)**
**(05 + 05 = 10 புள்ளிகள்)**

**7. இலட்சியமும் சமநோக்கும்**

(அ)

- இலட்சிய வாழ்வினால் நாம் பின்வரும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என ஆசிரியர் குறிப்பிடுகின்றார்
- இலட்சியம் உலகிற்கு நன்மையைத் தருவது
- இலட்சியம் சமூகப் பயனைக் காணச் செய்வது
- இலட்சியவாதிகள் தாமும் ஈடேற்றம் அடைந்து பிறரையும் ஈடேற்றம் அடையச் செய்வார்கள்
- இலட்சியவாதிகள் சம நோக்கமும் ஒருமைத் தன்மையும் கொண்டவர்கள்

**(05 புள்ளிகள்)**

(ஆ)

தசைகளுக்கு உட்புறத்தே இருக்கும் ஊனமாகிய உயிரைத் துறந்த ஒளிமிக்க அணிகலன்களாகிய மானத்தைக் காப்பதே பூமியின் மேல் வாழுகின்ற எவர்க்கும் புகழும் உறுதியும் குடிப்பிறப்பும் ஆகும். எனக் குறிப்பிடுவதனூடாக மகாபாரதத்திலே வருகின்ற அருச்சுனனது இலட்சியம் மாண்பு கடவாத மானமாகவும் உயிரைத் துறந்தாவது மானத்தைக் காக்க வேண்டும் எனவும் இலட்சியத்திற்கே முதலிடமும் மானத்திற்கு இரண்டாம் இடமும் கிடைக்கின்றதென குறிப்பிடப்படுகின்றது.

(05 **புள்ளிகள்)**

(05 + 05 = 10 **புள்ளிகள்)**

***